வைத்திய சந்திரிகா
Nov 1940.

JL
L: 5m211, N25VC
N40. 2.12
210190

908 908
1 DEC 1940

# வைத்திய சந்திரிகா.

ஓர் உயர்தர தமிழ் மாதப்பத்திரிகை.

பிரதி ஆங்கிலமாதம் முதல்வாரத்தில் வெளிவரும்

Vol. 2 November 1940. No. 12

விஷய சூசிகை. பக்கம்

ரஸாயனம் அல்லது காயகல்பம். (பத்திராதிபர்) 1—16

சித்தர் முறை 17—24

பண்டிட் நாராயணய்யங்கார்

சந்தா விகிதம்.

வருஷ சந்தா:—

உள் நாட்டுக்கு ரூ. 2

வெளிநாட்டுக்கு ரூ. 3

விளம்பர விகிதம்.

மாதம் 1-க்கு பக்கம் 1-க்கு ரூ 8

" " ½-க்கு ரூ 4

" " ¼-க்கு ரூ 2

கிடைக்குமிடம்:—

Pandit, S. NARAYANA IYENGAR.

Editor and Publisher

No. 2, Police Station West Lane, Madura.

வெங்கடேஸ்வர் பிரஸ், மதுரை:—40.

[விலை 0—3—0

JL
L:5002111, N&SK
N:40.2.12.
2/6/90.

குழந்தைகளுடைய ஆரோக்யம் முதலியவை
களுக்குஇன்றியமையாத

**ப ய ஸ் ய ா**

ஆயுர்வேதாசார்ய V. B. நடராஜ சாஸ்திரிகள் அவர்களால் ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப் பட்டது.

பால் கொடுக்கும் தாய்மார்களுக்கு அவசிய மானஓர் சிறந்த ரஸாயனம்.

இது தாய்ப்பாலின் அளவையும், ஜீவ ஸத்துக்களையும், மிகுதியாக விருத்தி செய்வதுடன் குழந்தைகளுக்குப் புஷ்டி, பலம், ஆரோக்கியம் முதலியவைகளையும் பூர்ணமாய் அளிக்கிறது. உபயோகிக்கும் விதம் முதலியவை ரஸா யனத்துடன் அனுப்பப்படும். விலை ரூபாய் 2-4-0 தான் தபால் செலவு வேறு

கிடைக்குமிடம்:—

**ஆத்ரேய ஆயுர்வேத ஓர்க்ஸ்,**

தென்னூர் ரோடு. திருச்சிராப்பள்ளி.

**ஸஹஸ்ரயோகம்.**

இது மலையாள தேசத்தில் பிரசித்தமான ஓர் வட மொழி வைத்ய நூலின் தமிழ் மொழி பெயர்ப்பு. இந் நூலை யனுசரித்தே மலையாளத்தில் மருந்து முறைகள் தயாரிக்கப்படுகின்றன. இந்நூலில் கஷாய முறைகள் 184, கிருதமுறைகள் 70, தைலமுறைகள் 85, சூர்ண முறைகள் 89, லேகியமுறைகள் 20, குளிகைமுறைகள் 73, ஜன்னிமருந்துகள் 75, கண்ணோய்களுக்கு மருந்துகள் 92, காதுநோய்களுக்கு மருந்துகள் 6, மூக்குநோய்களுக்கு மருந்துகள் 6, முகரோக மருந்துகள் 3, தொண்டை நோய் களுக்கு மருந்துகள் 6, உள்வாய் ரோகங்களுக்கு மருந்து கள் 5, பலவகை மருந்துகள் 153 ஆக இவ்விதம் மொத்தம் 867 மருந்துகள் வியக்தமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. இந்த ஒரு நூலே வைத்யர்களுடைய தேவைக்குப் போது மானது. புத்தகம் விலை ரூ. 1 தபால் கூலி வேறு.

கிடைக்குமிடம்—பண்டிட் நாராயணய்யங்கார்
நெ. 2, போலீஸ் ஸ்டேஷன் மேற்கு சந்து மதுரை.

7 DEC 1940

ரஸாயனம் அல்லது காயகல்பம்

(பத்திராதிபர்)

82. ஹேமாதி ரஸாயனம்—தங்கரேக்கு, நெல்லிக்காய் சூர்ணம் இவைகளைத் தேனில் குழைத்து காயத்திரீ மந்திரத்தை ஜபித்து சாப்பிட்டுப் பாலை அனுபானமாகக் கொள்ள மரணலக்ஷணம் பொருந்தியவனும் ஜீவிப்பான். இம்முறை சுசுருதத்திலும் அஷ்டாங்க ஸங்கிரஹத்திலும் காணப்படுகின்றது.

83. ஹேமாதி ரஸாயனம்—தங்கரேக்கு, தாமரைப்பருப்பு, நெற்பொரி, ஞாழல், தேன் இவைகளைச் சமமாக எடுத்து பால் அனுபானத்துடன் சாப்பிட முகத்தில் தேஜஸ் உண்டாகும். இம்முறை சுசுருதம் அஷ்டாங்க ஸங்கிரஹம் இவைகளில் காணப்படுகின்றது. குறிப்பு—தாமரைக்காயை உடைத்து உள்ளிருக்கும் பருப்பை எடுத்துக்கொள்ளவும்.

84. ஹேமாதி—தாமரைப்பருப்பு, நெல்லிக்காய் சூர்ணம், கடுக்காய், தான்றிக்காய், தங்கரேக்கு, இவைகளைத் தேன் நெய்களுடன் உபயோகிக்க பாம்பு விஷத்தால் பாதிக்கப்படாதவர்களாகவும் தீர்க்காயுஸ்ஸுக்களாகவுமிருப்பார்கள். இது அஷ்டாங்க ஸங்கிரஹத்தில் மாத்திரம் காணப்படுகின்றது.

85. ஹேமாதி—தங்கரேக்கு, தேன், தேசாவரம், வாய்விளங்க அரிசி, திரிபலை, நெய் சர்க்கரை, இவைகளை உபயோகிக்க வியாதியற்று நூறு வருஷம் வாழலாம். இது அஷ்டாங்க ஸங்கிரஹத்தில் மாத்திரம் காணப்படுகின்றது.

86. ஹேமாதி—தங்கரேக்கு, பில்வவேர் சூர்ணம், வசம்பு, நெய், இவைகளை ஒன்று சேர்த்துச் சாப்பிட தேக காந்தி, மூளை பலம், முதலியவை உண்டாகும். இம்முறை சுசுருதத்திலும் அஷ்டாங்க ஸங்கிரகத்திலும் காணப்படுகின்றது.

87. ஹேமாதி—சதாவரீ கிருதம் செய்து அதில் தங்க ரேக்கையும் தேனையும் சேர்த்துச் சாப்பிட ராஜவச்யமும் ஸித்திக்கும். இம்முறை சுசுருதத்திலும் அஷ்டாங்க ஸங்கிரஹத்திலும் காணப்படுகின்றது.

88. **ஹேமாதி**—தங்கரேக்கு, கோசந்தனு, மோஹனிகா, அதிமதுரம், தேன், ஸுவர்ணமாக்ஷிகம், இவைகளைச் சேர்த்து உபயோகிக்க சரீரகாந்தி உண்டாகும். இம்முறை சுசுருதத்தில் மாத்திரம் காணப்படுகின்றது. குறிப்பு—கோசந்தனு, மோஹனிகா, என்ற இரு சரக்குகளும் தத்காலம் கிடைப்பதில்லை.

89. **சது: குவலயம்**—இம்முறை அஷ்டாங்க ஹிருதயத்தில் காணப்படுகின்றது. இதுவே சற்று பேதத்துடன் சுசுருதத்திலும் காணப்படுகின்றது. கருநெய்தலின் தண்டு, கிழங்கு, இலை, புஷ்பம், இவைகளை வகைக்குத் தோலா நான்கு எடுத்து அரைத்துக் கல்கமாகச் செய்து பசுநெய் சின்னப்படி ஒன்றும் பசும்பால் சின்னப்படி ஒன்றும் சுத்தஜலம் சின்னப்படி நான்கும் சேர்த்து கிருதபதமாகக் காய்ச்சி வடித்து தங்கரேக்கைச் சேர்த்துச் சாப்பிட மூளை பலம் பெருகும். குறிப்பு—சுசுருதத்தில் கருநெய்தல் இலையைக் கஷாயம் செய்து அக்கஷாயத்தை சம அளவு பாலில் சேர்த்துக் காய்ச்சி பால் மாத்திரம் மீதமாக ஆகும்படி செய்து அதில் தங்கரேக்கையும் எள்ளையும் சேர்த்துச் சாப்பிடும்படி சொல்லப்பட்டிருக்கின்றது.

90. **பஞ்சாரவிந்தம்**—தாமரையின் தண்டு, இலை, புஷ்பம், காய், கிழங்கு, இவைகளை முன் அளவுப்படி எடுத்து அரைத்து கல்கம் செய்து முன்போல நெய் முதலியவைகளைச் சேர்த்து கிருதபதமாகக் காய்ச்சி வடித்து உபயோகிக்க முன் குணமுண்டாம். இம்முறை அஷ்டாங்க ஹிருதயத்தில் மாத்திரம் காணப்படுகின்றது.

91. **ஹேமாதி**—தாமரை, கருநெய்தல், இவைகளைக் கஷாயம் செய்து அதில் அதிமதுரத்தைக் கல்கமாகச் சேர்த்து நெய் சின்னப்படி ஒன்று விட்டு கிருதபதமாகக் காய்ச்சி தங்கரேக்கு சேர்த்துச் சாப்பிட்டு பாலை அனுபானமாகக் கொள்ள மிகுந்த பலனுண்டாம். இம்முறை சுசுருதத்தில் மாத்திரம் காணப்படுகின்றது. குறிப்பு—தாமரை, கருநெய்தல், இவை வகைக்கு 64 தோலா இடித்து ஜலம் சின்னப்படி 16 விட்டு நான்கு படியாகக் கஷாயம் வைக்கவேண்டும். அதிமதுரம் தோலா 16 இடித்துப் பொடி செய்து கல்கம் போடவேண்டும்.

2/10/90



92. **ஹேமாதி**—இம்முறை சுசுருதத்தில் மாத்திரம் காணப்படுகின்றது. தங்கரேக்கு, தேன், பசும்பால், சுவர்ணமாக்ஷிகம், இவைகளைக் கூட்டி உபயோகிக்க ரஸாயன குணமுண்டாம். குறிப்பு—சுவர்ணமாக்ஷிகத்தைச் சிந்தூரம் செய்து சேர்க்கவேண்டும்.

93. **ஹேமாதி**—தங்கரேக்கை வெள்ளைக்காக்கணட்டான் வேரை அரைத்து அந்த கல்கத்துடன் உபயோகிக்க ஆயுள் விருத்தியாகும். தங்கரேக்கை வசம்புடன் முன்போல உபயோகிக்க மூளை பலம் பெருகும். தாமரைப்பூவுடன் தங்கரேக்கை உபயோகிக்க முகத்தில் தேஜஸ் உண்டாகும். நிலப்பூசனிக்கிழங்குடன் தங்கரேக்கை உபயோகிக்க தாதுபுஷ்டி உண்டாகும். குறிப்பு—இதிலுள்ள நான்கு முறைகளும் அஷ்டாங்க ஸங்கிரஹத்தில் மாத்திரம் காணப்படுகின்றது. தங்கரேக்கு சேரும் மேலே சொன்ன முறைகளில் தங்கத்தை பச்சையாக எவ்விதம் உபயோகிப்பதென்ற பிரச்னை எழுகின்றது. அதற்குச் சமாதானம் அடியிற்காணுமாறு கூறப்பட்டுள்ளது.

அபக்வம் ஹேம ஸங்கிருஷ்டம் சிலாயாம் ஜலயோகத: ।
த்ரவரூபம்து தத் பேயம் மதுநா குணதாயகம் ॥
யத்வாபி வாகாக்யம் து ஸ்வர்ணபத்ரம் விசூர்ணிதம் ।
மதுநா ஸங்கிருஹீதம் சேத் ஸத்யோ ஹந்தி விஷாதிகம் ॥

இதன் பொருள்—"தங்கத்தைக் கல்வத்திலிட்டு ஜலத்தை விட்டு அரைத்துக் கலக்கிக் கொஞ்சம் தேன் சேர்த்து அப்படியே குடிக்கவேண்டும். அல்லது தங்கரேக்கைப் பொடித்துத் தேனில் குழைத்துச் சாப்பிடவேண்டும்." சுவர்ணத்திற்கு அளவு கால் தோலாவென்று நூல்களில் கூறப்பட்ட போதிலும் அரைக்கால் தோலா அளவு ரஸாயனங்களுக்குப் போதுமானது. இந்த ரஸாயனங்களில் நெய் முதலிய திரவ வஸ்துக்கள் சொல்லியிருந்தால் அந்த திரவ வஸ்துக்களைக் கொண்டு ரேக்கை அரைத்து அந்த திரவத்தில் கலக்கிச் சாப்பிடவேண்டும். திரவ வஸ்து சொல்லாத விடங்களில் தேன் அல்லது ஜலத்தில் அரைத்துக் கலக்கிச் சாப்பிடவேண்டும்.

94. மண்டூகபர்ணீ ரஸாயனம்—இம்முறை சுசுருதம், அஷ்டாங்க ஹிருதயம், அஷ்டாங்க ஸங்கிரஹம், சரகம் ஆகிய இவைகளில் காணப்படுகின்றது. நன்றாக விளைந்த வல்லாரையை சமூலமாக எடுத்து இடித்து ரஸம் பிழிந்து வடிகட்டி அக்னி பலத்திற்குத் தக்கவாறு தனியாகவோ அல்லது பசும்பாலைக் கலந்தோ சாப்பிட்டுப் பசும்பாலை அனுபானமாகச் சாப்பிடவும். அது ஜீர்ணமான பிறகு யவ அரிசியால் தயாரித்த அன்னத்தைப்பாலுடன் சாப்பிடவேண்டும். அல்லது எள்ளுப்பொடியுடன் சாப்பிடவும். இவ்விதம் மூன்று மாதம் செய்யவும். பால், நெய் இவைகளுடன் சாதத்தை உபயோகிக்கலாம். மூன்று மாதம் உபயோகிக்க முடியாவிட்டால் மூன்று நாள் உபவாஸமிருந்து பிறகு மூன்று நாளும் இம்மருந்தை முன்சொன்னபடி உபயோகிக்கவும். மூன்று நாளைக்குப் பிறகு பசும்பால், நெய், இவைகளை உபயோகிக்கவும். அல்லது பில்வக்காய் அளவு இம்மருந்தை நீர் விடாமல் அரைத்துப் பசும்பாலில் கலக்கி இவ்விதம் பத்து நாள் உபயோகிக்க வேண்டும். மூளைக்கு பலம் உண்டாகும்.

95. பிராம்ஹீகல்பம்—பிரம்மீ என்ற மூலிகையை இடித்துப் பிழிந்து ரஸம் எடுத்து முன் சொன்னபடி ஜீர்ணசக்தியை யனுசரித்துச் சாப்பிடவும். மருந்து ஜீர்ணமான பிறகு சாயங்காலத்தில் உப்பில்லாமல் கஞ்சி சாப்பிடவேண்டும். பசும்பால் ஒத்துக்கொண்டால் பால் சேர்ந்த கஞ்சி சாப்பிடலாம். இவ்விதம் ஏழு நாள் உபயோகிக்க புத்திகூர்மை யுண்டாகும். இவ்விதம் மறு ஏழு நாள் உபயோகிக்க அத்புதமான நூல்கள் இயற்றும்படி புத்திவன்மை யுண்டாகும். இவ்விதம் மூன்றாவது ஏழு நாள் உபயோகிக்க இரண்டு தடவை படித்த பல விஷயங்கள் மறதியின்றி மனதில் நிற்கும். இம்முறை சுசுருதத்தில் மாத்திரம் காணப்படுகின்றது.

96. பிராஹ்மீகிருத ரஸாயனம்—பிரம்மீ ரஸம் சின்னப்படி நான்கு, நெய் சின்னப்படி இரண்டு, ஜலம் சின்னப்படி இரண்டு இவைகளைச் சேர்த்து அதில் வாய்விளங்க அரிசி தோலா 32, வசம்பு சிவதை, இவை வகைக்குத் தோலா எட்டு, கடுக்காய், தான்றிக்காய், நெல்லிக்காய், இவை வகைக்கு 12 (நல்ல பருமனான காய்களாகப் பொறுக்கி எடுத்துக்கொள்ள வேண்டும்.) இடித்து வஸ்திரகாயம் செய்த பொடியைச் சேர்த்து கிருதபதமாகக் காய்ச்சி பத்திரப்படுத்தி ஜீர்ணசக்தியை யனுசரித்துச் சாப்பிட்டு மருந்து ஜீர்ணமான பிறகு பால், நெய் இவைகளுடன் அரிசி சாதம் சாப்பிடவும். இம்மருந்தால் சரீரத்துள் இருக்கும் கிருமிகள் வெளிப்படும். சரீரம் திருடமாகும். குறிப்பு—இம்முறை சுசுருதத்தில் மாத்திரம் காணப்படுகின்றது. குஷ்டம், முறைக்காய்ச்சல், அபஸ்மாரம், பைத்தியம், விஷங்கள், போன்ற மஹாவியாதிகளில் பேதிக்குக் கொடுக்கவேண்டிய சந்தர்ப்பங்களில் இம்மருந்தையே கொடுக்கலாம். சுமார் அரை அவுன்சு வீதம் கொடுக்கலாம்.



97. வசாகல்பம்—ஹைமவதீ என்ற வசம்பை (ஹிமாலயத்தில் உண்டாகும் வசம்பின் ஓர் பேதத்தை ஹைமவதீ என்பர்) ஜலம் விட்டு அரைத்து பெரிய நெல்லிக்காயளவு எடுத்துப் பசும்பாலில் கலக்கிச்சாப்பிடவும். மருந்து ஜீர்ணமான பிறகு பசும்பால், நெய் அரிசிசாதம் இவைகளை உபயோகிக்கவும். இவ்விதம் ஏழு நாள் உபயோகிக்க மூளைக்கு பலம் உண்டாகும். இவ்விதம் 490 நாள் உபயோகிக்க ரஸாயன குணமுண்டாம். மற்ற வசம்பை எட்டு தோலா எடுத்து இடித்துக் கஷாயம் செய்து பாலில் சாப்பிட முன்குணமுண்டாம். இம்முறை சுசுருதம், அஷ்டாங்க ஸங்கிரஹம், இவைகளில் காணப்படுகின்றது.

98. வசாகல்பம்—வசம்பைப் பொடி செய்து தேன், நெய், இவைகளுடன் ஜீர்ணசக்தியை யனுசரித்துச் சாப்பிட முன் குணமுண்டாம். இம்முறை அஷ்டாங்க ஸங்கிரஹத்தில் மாத்திரம் காணப்படுகின்றது.

99. வசாகிருதகல்பம்—வசம்பைப் பொடி செய்து 16 தோலாவை பசுநெய் சின்னப்படி ஒன்று சேர்த்து கிருதபதமாகக் காய்ச்சவும். இவ்விதம் நூறு தடவை காய்ச்சி உபயோகிக்க ரஸாயன குண முண்டாம். கண்டமாலை, யானைக்கால், முதலிய நோய்களையும் விலக்கும். இம்முறை சுசுருதம், அஷ்டாங்க ஸங்கிரஹம் ஆகிய இந்நூல்களில் காணப்படுகின்றது.

**100. அதிமதுரகல்பம்**—அதிமதுரப் பொடியைப் பசும்பாலில் கலக்கிச் சாப்பிடவும். ரஸாயன குண முண்டாம். இம்முறை அஷ்டாங்க ஹிருதயம், அஷ்டாங்க ஸங்கிரஹம் சரகம் இவைகளில் காணப்படுகின்றது.

**101. குடூசீகல்பம்**—சீந்திற்கொடியை இடித்து ரஸம் எடுத்து உபயோகிக்க முன் குண முண்டாம். இம்முறை சரகம் அஷ்டாங்க ஹிருதயம், அஷ்டாங்க ஸங்கிரஹம், இவைகளில் காணப்படுகின்றது.

**102. சங்கபுஷ்பீகல்பம்**—வெள்ளைக்காக்கணட்டான் கொடியை வேருடன் எடுத்து வேர், இலை, புஷ்பம், காய், இவைகளுடன் அரைத்துக் கல்கத்தை உபயோகிக்க முன் குணமுண்டாம். இம்முறை மூளைக்கு அதிக வலுவைக் கொடுக்கும். இம்முறை அஷ்டாங்க ஹிருதயம், அஷ்டாங்க ஸங்கிரஹம், 'சரகம் ஆகிய இவைகளில்காணப்படுகின்றது.

**103. சங்கபுஷ்பீகிருத கல்பம்**— இம்முறை அஷ்டாங்க ஹிருதயம், அஷ்டாங்க ஸங்கிரஹம், ஆகிய இவைகளில் காணப்படுகின்றது. வெள்ளைக்காக்கணட்டான் கொடியை சமூலமாக இடித்து எடுத்த ரஸம் சின்னப்படி 24, பசும்பால் சின்னப்படி எட்டு, பசுநெய் சின்னப்படி எட்டு, இவைகளைச் சேர்த்து அதில் விலாமிச்சவேர், கடுகுரோகிணீ, பால் மொதக்கன்கிழங்கு, அதிமதுரம், சந்தனம், நன்னாரி, வசம்பு, திரிபலை, திரிகடு, மஞ்சள், மரமஞ்சள், பேய்ப்புடல், இந்துப்பு, வகைக்குத் தோலா 7½ இடித்துப் பொடிசெய்து கல்கமாகப் போட்டு கிருதபதமாகக் காய்ச்சி வடிகட்டி. ஜீர்ண சக்தியை யனுசரித்து காலை ஒரு வேளை உபயோகித்து மருந்து முழுவதும் தீரும் வரை பத்தியத்துடன் இருக்க அரோக வாழ்வுடன் மூளைக்கும் பலம் அதிகரிக்கும்.

**104. பீஜகஸார ரஸாயனம்**—வேங்கை மரத்தின் வைரம், ஆரணிவேர், இவைகளைக் கஷாயமிட்டு அக்கஷாயத்தை வடிகட்டி. கஷாயத்தில் நான்கில் ஒரு பங்கு நெல்லிக்காய் ரஸமும் கொடுவேலி வேரை அரைத்து அந்த கல்கம் ஒரு தோலாவும் சேர்த்து ஓர் மண்



சட்டியிலிட்டு அதில் உளுத்தம்பருப்பு சின்னப்படி ஒன்று சேர்த்து அடுப்பேற்றி வேகவைத்து உளுத்தம்பருப்பு நன்குக வெந்தவுடன் இறக்கிஆறின பிறகு தேன், நெய் இவைகளுடன் ஜீர்ணசக்தியை யனுசரித்துச் சாப்பிடவும். ஜீர்ணமான பிறகு உப்பில்லாமல் பாசிப் பயறு, நெல்லிக்காய், இவைகளால் தயாரிக்கப்பட்ட கஞ்சியுடன் நெய் மிகுந்த அரிசி சாதம் சாப்பிடலாம். அல்லது பசும்பாலோடு அரிசி சாதம் சாப்பிடலாம். இவ்விதம் மூன்று மாதம் செய்ய கண்களுக்குப் பார்வை சக்தி பலப்படும். இம்முறை சுசுருதத்தில் மாத்திரம் காணப்படுகின்றது.

**105. நாகபலா ரஸாயனம்**—இம்முறை அஷ்டாங்க ஹிருதயம், அஷ்டாங்க ஸங்கிரஹம், சரகம்சுசுருதம்ஆகிய இந்நூல்களில்காணப்படுகின்றது. நல்ல பூமியில் முளைத்தும் இளம் செடியும் முற்றின செடியுமாக வில்லாமல் நடுத்தர வயதுள்ள நாகபலா செடியை பழைய இலைகள் உதிர்ந்து புதிய இலைகள் உண்டாகாத தருணம் பார்த்து மாசி அல்லது பங்குனி மாதத்தில் புஷ்ய நக்ஷத்திரத்தில் வேருடன் கொண்டு வந்து வேரின் மேல் பட்டையை மாத்திரம் எடுத்து நான்கு தோலா யிடை அல்லது ஒரு தோலா யிடையை கல்கமாக அரைத்தாவது அல்லது சூர்ணம் செய்தாவது பாலில் கலக்கிச் சாப்பிடவும். அல்லது தேன், நெய், இவைகளில் குழைத்துச் சாப்பிடலாம். (சுசுருதத்தில் தேனில் குழைத்துச் சாப்பிடுவது நலமெனச் சொல்லப்பட்டிருக்கிறது.) மருந்து ஜீர்ணமான பிறகு பசும் பாலையே ஆகாரமாகக் கொள்ளவேண்டும். அல்லது பசும்பாலுடன் அரிசி சாதம் சாப்பிடலாம். இவ்விதம் ஒரு வருஷம் உபயோகிக்க ரஸாயன குணமுண்டாம். குறிப்பு—அஷ்டாங்க ஹிருதயத்தில் ஐப்பசி மாதத்தில் இம்முறையை உபயோகிக்கும்படி கூறப்பட்டிருக்கின்றது.

**106. கோக்ஷுர ரஸாயனம்**—காய் உண்டாகும் நிலைமையிலும் ஆனால் காய் பூர்ணமாக உண்டாகாத நிலைமையிலுமுள்ள சிறுநெருஞ்சியை வேருடன் கொண்டு வந்து நிழலில் உலர்த்தி அதை இடித்து வஸ்திரகாயம் செய்து அந்தப் பொடியை முன்

சொன்ன லக்ஷண முள்ள சிறுநெரிஞ்சி ரஸத்தால் நன்றாக பாவனை செய்து உலர்த்தி நான்கு தோலா பொடியைப் பசும்பாலில் கலக்கிச் சாப்பிட்டு ஜீர்ணமான பிறகு பாலும் அரிசி சாதமும் சாப்பிடவும். இவ்விதம் 800 தோலா பொடி சாப்பிட மிகுந்த ரஸாயன குண முண்டாம். இம்முறை அஷ்டாங்க ஹிருதயத்தில் மாத்திரம் காணப் படுகின்றது. அஷ்டாங்க ஸங்கிரஹத்தில் சாதாரணமாகச் சொல்லப் பட்டிருக்கின்றது.

(107) குருந்தொட்டி, (108) பெரிய குருந்தொட்டி, (109) சந்தனம், (110) அகரு, (111) தவம் (112) தினிசம், (113) கருங்காலி, (114) சிம்சுபா, (115) வேங்கை, (116) அடபதியன்கிழங்கு, இவைகளை நாகபலாவில் சொன்னபடி உபயோகிக்க ரஸாயன குணமுண்டாம். குறிப்பு—இந்த பத்து கல்பங்களும் சரகம், அஷ்டாங்க ஸங்கிரஹம், அஷ்டாங்க ஹிருதயம் இவைகளில் காணப்படுகின்றன. இவற்றுள் சந்தனம், அகரு, தவம், தினிசம, கருங்காலி, சிம்சுபா, வேங்கை, ஆகிய இந்த மரங்களிலிருந்து ஸ்வரஸம் எடுக்கவேண்டும். அதற்கு உபாயமாவது—பச்சை மரம் இருக்குமிடத்திற்குப் போய் மரத்தின் சுற்றிவர இருக்கும் பூமியைக் குடைந்து மரத்தின் ஆணிவேர் அதாவது முக்கியமான வேரை மாத்திரம் வெட்டி விட்டு அவ்விடத்தில் ஓர் இரும்பு குடத்தை வைத்து சுற்றி வர இருக்கும் குடைந்த பள்ளத்தை மண்ணால் நிறைத்து மரத்திற்குச் சுற்றிவர எரு அடுக்கி புடமிட நெருப்பு அந்த மரத்தில் தாக்கி மரத்தின் ரஸம் ஆணிவேர் வெட்டின இடத்தில் இறங்கி குடத்தில் தங்கும். மரம் இலை, காய், பூக்களுடன் நின்றபடி யிருக்கவேண்டும். பிறகு முன்போல பூமியைத் தோண்டி மண் சம்பந்தப்படாமல் உள்ளிருக்கும் குடத்தை எடுத்து ஸ்வரஸத்தை பத்திரப்படுத்தவும். பச்சை மரமாகக் கிடைக்காவிட்டால் முன் சொன்ன மரங்களின் நடு வைர பாகங்களை எடுத்து இரண்டங்குலம் அல்லது மூன்றங்குலம் துண்டுகளாக நறுக்கி நான்கு மடங்கு சுத்த ஜலத்தில் சேர்த்து வெய்யிலில் மூன்று நாள் வைத்திருக்க வேண்டும். பிறகு அந்த மரத்துண்டுகளை எடுத்து விட்டு அந்த நீரில் மறுபடியும் புதிய துண்டுகளை முன் அளவில் போட வேண்டும். மூன்று நாள் வெய்யிலில்



வைத்திருந்து பிறகு துண்டுகளை விலக்கிவிட்டு அதே நீரில் மறுபடியும் முன்போல துண்டுகளைப் போட்டு மூன்று நாள் முன்போல வெய்யிலில் வைத்திருந்து துண்டுகளை விலக்கிவிட்டு வடிகட்டிக் கொள்ளவும். இது ஸ்வரஸம் போன்று குணமுள்ளதாக விருக்கும். குருந்தொட்டி, பெரிய குருந்தொட்டி, ஆகிய இவைகளில் ஸ்வரஸம் எடுப்பது கஷ்டம். இவைகளை நன்றாக இடித்து வஸ்திரகாயம் செய்து அந்தப் பொடி தோலா 64 எடுத்து ஓர் மண் பாண்டத்திலிட்டு சின்னப்படி ஒரு படி சுத்தஜலத்தை விட்டு நன்றாகக்கலந்து 24 மணி அப்படியே வைத்திருந்து பிறகு அதைக்கைகளால் நன்றாகப் பிசைந்து வடிகட்டிக் கொள்ளவும். இது உலர்ந்த சரக்குகளிலிருந்து ஸ்வரஸம்எடுக்கும் முறை. கிழங்குகள், கொடிகள்,இவைகளை உரலில் இடித்து ஸ்வரஸம் எடுத்துக்கொள்ளவேண்டும்.

117. வாராஹீகல்பம்—இம்முறை சுசுருதம், அஷ்டாங்க ஹிருதயம், அஷ்டாங்க ஸங்கிரஹம், ஆகிய இந்நூல்களில் காணப்படுகின்றது. பன்றிமோந்தான் கிழங்கை 400 தோலா இடை எடுத்துச் சூர்ணம் செய்து உசிதமான அளவு பொடியைப் பாலில் கலக்கித் தேன் கொஞ்சம் சேர்த்துச் சாப்பிட்டு மருந்து ஜீர்ணமான பிறகு பால், நெய் இவைகளுடன் அரிசி சாதம் சாப்பிடலாம். இவ்விதம் 400 தோலா பொடியை உபயோகிக்க ரஸாயன குணம் உண்டாகும். (2) இந்தப் பொடியைப் பாலில் கலந்து காய்ச்சி ஆறின பிறகு கடைந்து வெண்ணை எடுத்து நெய் செய்து தேனுடன் அந்த நெய்யை தினம் காலையிலும் சாயங்காலத்திலும் அல்லது தினம் ஒரு வேளை உபயோகித்து முன் பத்தியம் அனுஷ்டிக்க முன் குண முண்டாம். இவ்விதம் ஒரு மாதம் உபயோகிக்கவும். இந்த இரண்டு முறைகளும் சுசுருதத்தில் காணப்படுகின்றன. (3) பன்றிமோந்தான் கிழங்கைப் பச்சையாக எடுத்து பால் விட்டு அரைத்துப் பாலில் கலக்கிச் சாப்பிட்டு ஒரு மாதம் இவ்விதம் உபயோகித்து ஆகார மில்லாமலும் மறுபடியும் ஒரு மாதம் உபயோகித்து பசும்பால் அரிசி சாதம் ஆகிய இந்த ஆகாரத்துடனும் இருந்தால் ரஸாயன குண முண்டாம். (4) பன்றிமோந்தான் கிழங்கை இடித்துச் சூர்ணம் செய்து அதை அக்கிழங்கின் ரஸத்தால் பாவனை செய்து

உலர்த்தி தேன், நெய் இவைகளில் குழைத்துச் சாப்பிட முன் குண முண்டாம், இந்தஇரண்டு முறைகளும் அஷ்டாங்க ஹிருதயத்தில் காணப்படுகின்றன. குறிப்பு—இந்த வாராஹீகல்பம் மொத்தத்தில் நான்கு வித முறைகளாக நூல்களில் காணப்படுகின்றது. வாராஹீ என்ற வடமொழிச் சொல்லுக்கு பன்றிமோந்தான் கிழங்கு என்பது தமிழ்ப் பொருள். இது தத்காலம் கிடைப்பது சற்று கடினமாக விருக்கிறது. நமது தென்னாட்டில் இதை யறிந்தவர் சிலர் இருக்கின்றனர். அவர்களைக் கொண்டு இக்கிழங்கைச் சம்பாதிக்கவேண்டும் இதற்கு லக்ஷணம் நூல்களில் அடியிற் காணுமாறு கூறப்பட்டிருக்கிறது. அதாவது—இக்கிழங்கு பன்றியின் தலை போல் இருக்கும். கிழங்குக்கு மேல் பாகத்தில் பன்றி மயிர் போன்ற மயிர்கள் அடர்ந்திருக்கும். இக்கிழங்கின் கொடியில் இலைகள் வெற்றிலை போன்று இருக்கும். இந்தக் கொடியை வாராஹீ என்கின்றனர். வாராஹீ என்ற சொல்லுக்கு விருத்த தாரகமென அஷ்டாங்க ஹிருதய உரையில் பொருள் கூறப்பட்டிருக்கின்றது. அது சரியல்ல. அடியில் கூறப்படும் விருத்த தாரக லக்ஷணங்களால் இவைகளின் பேதம் நன்கு புலப்படும்.

118. **விருத்ததாரக கல்பம்**—இம்முறை அஷ்டாங்க ஸங்கிரஹத்தில் மாத்திரம் காணப்படுகின்றது. தவிர விருத்ததாரக லக்ஷணமும் அஷ்டாங்க ஸங்கிரஹத்தில் மாத்திரம் காணப்படுகின்றது. இதன் லக்ஷணமாவது—முப்பட்டையாகத்தண்டுகள் (கொடியின் தண்டுகள்) ஏராளமான கிளைகள், மஞ்சள் நிறமுள்ள பழங்கள், சிகப்பான புஷ்பங்கள், மிருதுவான உரோமங்களுடன் கூடிய வெற்றிலை போன்ற இலைகள், பருமனான கிழங்குகள் போன்ற வேர்கள், இவைகளுடன் கூடியதாக விருக்கும். இதற்கு **ச்யாமா, விருத்ததாரகம், வேல்லரிகா, மஹிஷவல்லீ,** என நான்கு பெயர்கள் உண்டு. குறிப்பு—பாவப்பிரகாசத்தில் விருத்ததாரகத்தைச் சிலர் சமுத்திர சோகி என்று நினைப்பதாகவும் அது தப்பிதமென்றும் சமுத்திர சோகிக்கும் விருத்ததாரகத்திற்கும் மிகுந்த பேதமுண்டென்றும் கூறப்பட்டிருக்கின்றது. சித்திரை, வைகாசி மாதங்களில் விருத்ததாரகத்தின் வேர்களைக் கொண்டு வந்து அவைகளை

சென்னை-600



நிழலில் உலர்த்தி இடித்து வஸ்திரகாயம் செய்த பொடி 400 தோலா எடுத்து நெய் விட்டுப் பிசைந்து நெய் பாண்டத்தில் வைத்து ஒரு பக்ஷகாலம் தான்யபுடம் வைத்து எடுத்து உசிதம் போல சரீரக்கூறை அனுசரித்துச் சாப்பிட்டுப் பசும்பாலை அனுபானமாகச் சாப்பிட்டு மருந்து ஜீர்ணமானவுடன் பாலும் நெய்யும் சாப்பிட்டு இவ்விதம் அந்த 400 தோலா பொடியையும் உபயோகிக்க ரஸாயன குணமுண்டாம். பல வியாதிகள் விலகும்.

119. **விருத்ததாரக கல்பம்**—இம்முறை சார்ங்கதரஸம் ஹிதையிலும் அஷ்டாங்க ஸங்கிரஹத்திலும் காணப்படுகின்றது. விருத்ததாரகம், அமுக்கராவேர், இவை வகைக்குத் தோலா 120 இடித்து வஸ்திரகாயம் செய்து நெய்யில் குழைத்தாவது அல்லது பாலில் கலக்கியாவது சாப்பிட்டு மருந்து ஜீர்ணமான பிறகு முன் சொன்னபடி பத்தியமிருந்தால் ரஸாயன குணமுண்டாம்.

120. **விருத்ததாரக கல்பம்**—அமுக்கராவேர், சதாவரி, சிறு நெருஞ்சி, இவை வகைக்குத் தோலா நான்கு, விருத்ததாரகம், தோலா 12 இவைகளை இடித்து வஸ்திரகாயம் செய்து நெய்யில் குழைத்துச் சாப்பிட்டு பாசிப்பயறு கஞ்சியுடன் அரிசி சாதம் பத்தியம் கொள்ளவும். இவ்விதம் ஏழு நாள் செய்ய தாவனி இனிமையாக விருக்கும். இம்முறை அஷ்டாங்க ஸங்கிரஹத்தில் மாத்திரம் காணப்படுகின்றது.

121. **விருத்ததாரகம்**—(1) விருத்ததாரகத்தை முன் போல வஸ்திரகாயம் செய்து அந்தப் பொடியை தண்ணீர்விட்டான் கிழங்கு ரஸத்தால் ஏழு நாள் பாவனை செய்து நிழலில் உலர்த்தி நெய்யில் குழைத்துச் சாப்பிடவும். (2) விருத்ததாரக சூர்ணத்தை நெல்லிக்காய் ரஸத்தில் பாவனை செய்து தேன், நெய், இவைகளில் குழைத்தாவது சாப்பிடலாம் அல்லது பாலில் கலக்கியாவது சாப்பிடலாம். (3) விருத்ததாரக வேரின் ரஸம் எடுத்து பாலில் கலந்து சாப்பிடவும். (4) விருத்ததாரகம் கல்கம் சேர்த்துக் காய்ச்சின கிருதம் சாப்பிடலாம். (5) விருத்ததாரகப் பொடியை கோமூத்திரத்தில் ஊறவைத்து சாப்பிட குஷ்டம், குன்மம், யானைக்கால், [கண்டமாலை,

முதலிய ரோகங்களும் நிவர்த்தியாகும். குறிப்பு--இந்த ஐந்து முறைகளும் அஷ்டாங்க ஸங்கிரஹத்தில் காணப்படுகின்றன.

122. விருத்ததாரக கல்பம்—திப்பிலி, திரிபலை, மரமஞ்சள், சுக்கு, வெள்ளைச்சாரணைத்தி, இவை வகைக்குத் தோலா 40 விருத்த தாரகம தோலா 280 இவைகளை இடித்து வஸ்திரகாயம் செய்து தான்யாம்லத்தில் அல்லது காடியில் சாப்பிட ரஸாயன குணமுண்டாவதுடன் வாதநோய்கள், குன்மம், மகோதரம், விஷங்கள் முதலியன விலகும். இம்முறை அஷ்டாங்க ஸங்கிரஹத்தில் காணப்படுகின்றது.

123. விருத்ததாரகம்---திப்பிலி, சுக்கு, திரிபலை, கண்டங்கத்திரி, வாய்விளங்கம், கோரைக்கிழங்கு, இவை வகைக்குத் தோலா நான்கு, விருத்ததாரகவேர் தோலா 32, இவைகளை இடித்து வஸ்திரகாயம் செய்து நெய், தேன் இவைகளில் குழைத்துச் சாப்பிட ரஸாயன குணமுண்டாம். இம்முறை அஷ்டாங்க ஸங்கிரஹத்தில் காணப்படுகின்றது.

124. விருத்ததாரக கல்பம்—விருத்ததாரகப்வேரை இடித்துப் பொடி தோலா நான்கு, அதன் ஸ்வரஸம், நெய், தேன்; இவை வகைக்குத்தோலா ஒன்று இவைகளைச் சேர்த்துச் சாப்பிட காஸம், சுவாஸம், முதலிய நோய் விலகும். இம்முறை அஷ்டாங்க ஸங்கிரஹத்தில் காணப்படுகின்றது.

125. விருத்ததாரக கல்பம்—விருத்ததாரகவேர், விருத்ததாரக விதை, திப்பிலி, இவைகளைச் சமபிடை எடுத்து இடித்து வஸ்திரகாயம் செய்து அந்தப் பொடியை விருத்ததாரகவேர், பழம், இவைகளின் ரஸத்தால் பாவனை செய்து பிறகு சீந்திற்கொடி ஸ்வரஸத்தால் பாவனை செய்து உலர்த்தி நெய் விட்டுப் பிசைந்து நெய் பாண்டத்தில் வைத்துச் சாம்பலில் புதைத்து வைத்து ஒரு மாதம் கழித்து எடுத்து அதை ஒரு வருஷம் உபயோகிக்க வெகு காலம் ஜீவித்திருக்கலாம். இம்முறை அஷ்டாங்க ஸங்கிரஹத்தில் காணப்படுகின்றது.



126. விருத்ததாரக கல்பம்—விருத்ததாரகத்தை இடித்து வஸ்திரகாயம் செய்து அதில் 400 தோலா எடுத்து அதை நெய், தேன், இவைகளால் பிசைந்து 100 நாள் தான்யபுடம் வைத்து எடுத்து உபயோகிக்க ரஸாயன குணமுண்டாம். இம்முறை அஷ்டாங்க ஸங்கிரஹத்தில் காணப்படுகின்றது. குறிப்பு—விருத்ததாரக முறை அஷ்டாங்க ஸங்கிரஹத்தில் தான் சொல்லப்பட்டிருக்கின்றது. விருத்ததாரகத்தில் கீழே சொன்ன விதமாக மொத்தம் 13 முறைகள் காணப்படுகின்றன.

127. ஸுவர்ணமாக்ஷிக கல்பம்--குறிப்பு-இம்முறை அஷ்டாங்க ஸங்கிரஹத்தில் மாத்திரம் காணப்படுகின்றது. அஷ்டாங்க ஸங்கிரஹத்திலும் ரஸரத்ன ஸமுச்சயத்திலும் ஸுவர்ணமாக்ஷிகத்தின் விவரம் அடியிற்காணுமாறு கூறப்பட்டுள்ளது. அதாவது—ஸுவர்ணமாக்ஷிகம் ஆதியில் மகாமேரு என்ற ஸுவர்ணமலையில் காணப்பட்டது. பிறகு தாபீ, கிராதம், சீனம், யவனம், என்ற இத்தேசங்களிலும் காணப்படுகின்றது. இவற்றுள் தாபீ என்பது தபதீ நதிக்கரை எனப் புலப்படுகின்றது. கிராதேசம் இந்தியாவிற்கு வெளியிலுள்ள தேசம். இது தக்காலம் நமக்கு விளங்கவில்லை. சீனம் என்பது தக்காலத்தில் சைனு என்ற நாடாகும். யவனதேசம் என்பது தக்காலத்தில் கிரீஸ் என வழங்கும் நாடாகும். ஸுவர்ணமாக்ஷிகம் முன் சொன்ன இடங்களில் வைகாசி மாதத்தில் சூரிய தாபம் பெற்று சூடேறி இருக்கும். கான்யகுப்ஜ தேசத்தில் உண்டாகும் ஸுவர்ணமாக்ஷிகம் ஸுவர்ணம் போலவே இருக்கும். தபதீ நதிக்கரையில் கிடைக்கும் ஸுவர்ணமாக்ஷிகம் ஐந்து மாத்துள்ள தங்கம் போன்று இருக்கும். குறிப்பு—தக்காலம் நமது நாட்டில் சில இடங்களில் ஸுவர்ணமாக்ஷிகம் கிடைப்பதாகத் தெரிகின்றது. வடநாட்டிலிருந்து வரும் சுவர்ணமாக்ஷிகம் சில சமயங்களில் கல் மிகுந்து காணப்படுகின்றது. அவைகளைப் பொறுக்கி எடுக்க வேண்டியதாகின்றது. இதைச் சிந்தூரம் செய்து தான் கல்பமுறைகளில் சேர்க்கவேண்டும். ஸத்வம் எடுத்து அதைச் சிந்தூரம் செய்து கொள்ளுவது மிகவும் உத்தமம். இதன் விவரங்கள் சித்தர் முறை என்ற பகுதியில் காணலாம். சிலாஜது என்ற

கல்மதத்தில் சொல்லப் போகும் விதமாக இங்கும் பத்யம் அனுஷ்டிக்க வேண்டும். கொள்ளு முதலியவைகளை விலக்கவேண்டும். ஸுவர்ண மாக்ஷிகத்தை நெய்யுடனாவது தேனுடனாவது அல்லது சர்க்கரை தேன் இவைகளுடனாவது அல்லது தண்ணீருடனாவது நல்லெண்ணெ யுடனாவது உபயோகிக்க தோலைப்பற்றிய நோய்கள், விஷங்கள், முதலியன விலகும்.

128. ஸுவர்ணமாக்ஷிக கல்பம்—தான்றிக்காய், திராக்ஷை, மண்டூரம், கோரைக்கிழங்கு, நெல்லிவற்றல், திரிபலை, கல்மதம், வகைக்குத் தோலா ஒன்று, சுவர்ணமாக்ஷிக சிந்தூரம் தோலா ஒன்பது இவைகளைச் சேர்த்து சரீரக்கூறை யனுசரித்துத் தேனில் கொள்ள பாண்டு நோய் விலகும். ரஸாயன குணமுண்டாம்.

129. ஸுவர்ணமாக்ஷிக கல்பம்—இம்முறை அஷ்டாங்க ஸங் கிரஹத்தில் காணப்படுகின்றது. சுக்கு, மண்டூரம், இலந்தை வித்து, திப்பிலி, ஆகிய இவை வகைக்குத் தோலா ஒன்று, ஸுவர்ண மாக்ஷிகச் சிந்தூரம் தோலா இரண்டு, தேன், கருப்பு எள்ளு, ஆகிய இவை வகைக்குத் தோலா ஒன்று, இவைகளை அரைத்து உசிதமான அளவு உபயோகிக்க பாண்டு நோய் விலகும்.

130. ஸுவர்ணமாக்ஷிக கல்பம்—அயச்சிந்தூரம், ஸுவர்ண மாக்ஷிகச்சிந்தூரம் இவை சமமாக எடுத்து கல்மதம், திரிகடு, இவை களுடன் உபயோகித்து பசுப்பால் பத்தியம் கொள்ள க்ஷய நோய் தீரும். இம்முறை அஷ்டாங்க ஸங்கிரஹத்தில் காணப்படுகின்றது.

131. ஸுவர்ணமாக்ஷிக கல்பம்—அயச்சிந்தூரம், ஸுவர்ண மாக்ஷிகச் சிந்தூரம், நெய், தேன், நெல்லிவற்றல், தாமரைப்பூ, இவைகளைச் சேர்த்து அரைத்து சர்க்கரையுடன் உபயோகிக்க கண், மூக்கு, காது, நாக்கு, இவைகளுக்கு வலுவைக் கொடுக்கும். இம்முறை அஷ்டாங்க ஸங்கிரஹத்தில் காணப்படுகின்றது.

132. ஸுவர்ணமாக்ஷிக கல்பம்—ஸுவர்ணமாக்ஷிகம், திரி பலை, இவைகளைச் சமமாக எடுத்து ஓர் இரும்பு பாத்திரத்தில் போட்டு நெய் விட்டு இலேசாக வறுத்துப் பிறகு எடுத்து அரைத்து உப யோகிக்க ரஸாயன குணமுண்டாம். இம்முறை அஷ்டாங்க ஸங் கிரஹத்தில் காணப்படுகின்றது.



133. ஸுவர்ணமாக்ஷிக கல்பம்—ஸுவர்ணமாக்ஷிகத்தைத் திரிபலைப்பொடியுடன் தேன், நெய், இவைகளைச் சேர்த்துச் சாப்பிட மிகுந்த ரஸாயன குணமுண்டாம். இம்முறை அஷ்டாங்க ஸங் கிரஹத்தில் காணப்படுகின்றது.

134. குக்கலு கல்பம்—இம்முறை அஷ்டாங்க ஸங்கிரஹத் தில் காணப்படுகின்றது. குக்கில் குணம்—இது யோக வாஹீ. அதாவது எந்த மருந்தோடு சேருகின்றதோ அந்த மருந்தின் வீர்யத்தை அதிகப்படுத்திக் கொண்டே தன்னுடைய குணத்தையும் கொடுக்கக்கூடியது. அக்னிபலம், புத்திக்கூர்மை, ஞாபகசக்தி, இவைகளை யுண்டுபண்ணும். வாத நோய்களை விலக்கும். இதற்கு மஹிஷாக்ஷகுக்கலு என்றும் பெயர். இது வெண்மையாகவாவது அல்லது பத்மராகக்கல் போல் சிகப்பாகவாவது அல்லது இந்திர நீலக்கல் போல கறுப்பாகவாவது இருக்கும். குறிப்பு—வெண்மை நிறம் தத்காலம் துர்லபம். மற்ற இரு நிறங்களும் கிடைக்கின்றன. (1) குக்கலுவை சுத்திசெய்து மஹாபஞ்சமூல கஷாயத்துடன் உப யோகிக்க வாத நோய்கள் விலகும். (2) சிறுபஞ்சமூல கஷாயம் அல் லது இளஞ்சூடான வெந்நீர் இவைகளுடன் உபயோகிக்க முன் குணமுண்டாம். (3) வசாதிகணத்தைக் கஷாயம் செய்து அதோடு உபயோகிக்க முன் குணமுண்டாம். குறிப்பு—வசாதிகணமாவது வசம்பு, கோரைக்கிழங்கு, தேவதாரு, சுக்கு, அதிவிடயம், கடுக்காய் ஆக இந்த ஆறு சரக்குகளுக்கும் வசாதிகணமென்று பெயர். (4) வரணாதிகணத்தைக் கஷாயம் செய்து அதோடு உபயோகிக்க செவிட்டுத்தன்மை, பல்வலி, காதுவலி, தலைவலி, ஆகிய இவை நீங்கும். குறிப்பு—வரணாதிகணத்தின் விவரத்தை ஸஹஸ்ரயோகம் 25 வது பக்கத்தில் பார்க்கவும். (5) அமுக்கராவேர் கஷாயத்துடன் அல்லது ஜீவனீயகஷாயத்துடன் சாப்பிட வாத நோய்கள், ரக்த பித்தம், ஆகிய இவை விலகும். (6) நெய்தல் கிழங்கு, திராக்ஷை, சிகப்பு சந்தனம் ஆகிய இவைகளைக் கஷாயம் வைத்துக்கொள்ள வாதநோய், பித்தநோய், ஆகிய இவை விலகும் (7) பத்மகாதி கணத்தைக் கஷாயம் வைத்துக் கொள்ள முன் சொன்ன ரோகங்

கள் விலகும். குறிப்பு—பத்மகாதிகணமாவது—பத்மகாஷ்டம், (இது சவுக்கு மரத்தின் குச்சிகள் போன்று இருக்கும். இது விருக்ஷ வகையைச் சேர்ந்தது) ப்ரபௌண்டரீகம், (இதுவும் ஓர் மர இனத்தைச் சேர்ந்தது) விருத்தி (இதற்கு ச்ராவணீ என்றும் பெயர் உண்டு. இது கொட்டைக்கரந்தை இனத்தைச் சேர்ந்தது) மூங்கிலுப்பு, ரித்தி (இதற்கு மகாச்ராவணீ என்று ஓர் பெயரும் உண்டு) கர்காடகச்சிருங்கி, சீந்திற்கொடி, ஜீவனீயகணத்தைச்சேர்ந்த பத்து சரக்குகள் ஆக இந்த 16 சரக்குகளுக்கும் பத்மகாதிகணமெனப் பெயர். (8) செவ்வியம், கோஷ்டம, வாய்விளங்கம், ஓமம், சுக்கு, முதியார்கூந்தல், ஆகிய இவைகளின் கஷாயத்துடன் உபயோகிக்க கபவாத நோய்கள் விலகும். (9) திரிகடு, கொடுவேலி, கோரைக்கிழங்கு, வாய்விளங்கம், திரிபலை ,இவை கஷாயம் செய்து குக்கலுவை கிருதத்துடன் உபயோகிக்க கபம், வாதம், மேதஸ், இவைகளால் உண்டாகும் நோய்கள் விலகும். (10) பேய்ப்புடல், வேப்பம்பட்டை திரிபலை, சீந்திற்கொடி, கருங்காலி, மஞ்சள், மரமஞ்சள், வேங்கை, இவைகளைத் தனித்தனி கஷாயம் செய்து உபயோகிக்க கபபித்த நோய்கள் தீரும். (11) பேய்ப்புடல், வேப்பம்பட்டை, இவைகளின் கஷாயத்தில் ரஸாஞ்சனத்தையும் மஹிஷாக்ஷகுக்கலுவையும் சமஎடை சேர்த்து அரைத்துச் சாப்பிட தொண்டை நோய்கள், கண்டமாலை, கிரந்தி, தொந்தி, கிருமிநோய் இவைகளை விலக்கும். (12) கல்மதத்தையும் குக்கலுவையும் சமஎடை எடுத்துப் பசும்பாலில் சாப்பிட வாத சோணிதம் என்ற நோய் தீரும். (13) மாமிசரஸம், பால், கோமூத்திரம், இவைகளில் ஒன்றுடன் உபயோகிக்க வாதபித்த நோய்கள் போம். (14) பிரம்மீ, வல்லாரை, வெள்ளைக்காக்கணட்டான், இவைகளில் எதாவது ஒன்றின் ரசத்துடன் சாப்பிட மூளைக்கு பலம் கொடுக்கும். (15) திப்பிலி, கொடுவேலி, வெப்பாலையரிசி, வாய்விளங்கம், வகைக்குத்தோலா நான்கு, வசம்பு தோலா 24, குக்கில் தோலா 40 இவைகளை ஒன்றுசேர்த்து தேனில் பிசைந்து வைத்துக்கொண்டு சாப்பிட சகல நோய்களும் தீரும். குறிப்பு—திப்பிலி முதலிய ஐந்து சரக்குகளையும் தனியாக இடித்து வஸ்திரகாயம் செய்து கொண்டு பிறகு குக்கிலைச் சேர்த்துக் கொள்ளவும் 400 தோலா எடை இம்மருந்தை உபயோகிக்க அகால மிருத்யு முதலியவை நீங்கும் கீழே சொல்லப்படும் சிலாஜது முறைகள் விதமாகவும் குக்கிலைத் தயாரித்து உபயோகிக்கலாம். குக்கில் மிகுந்த குணத்தைக் கொடுப்பதாக விருந்தாலும் அளவுக்கு மீறி உபயோகித்தால் திமிரம், முகநோய்கள், பிரமேஹம், ஆண்மையிழத்தல், ஆகிய நோய்கள் காணும். மலத்தை இளகச் செய்யும். உடம்பில் எண்ணைப்பசையை நீக்கும். ஆகவே முன் சொன்ன நோய்கள் இருப்பவர்களுக்கு குக்கிலை உபயோகிக்கலாகாது.



## சித்தர் முறை.

(பண்டிட் நாராயணய்யங்கார் எழுதியது)

அத: பாதனம்—இது மற்றொரு விதம். அப்பிரகநவநீதத்தையும் ரஸத்தையும் நன்றாக எலுமிச்சம்பழ ரஸத்தால் ஒரு நாள் அரைத்துப் பிறகு பூனைக்காலி, முருங்கை, கொடுவேலி, இந்துப்பு, கடுகு, இவைகளையும் சேர்த்து அரைத்து முன்போல பாண்டத்தில் தடவி கீழ்பாண்டத்தில் ரஸம் விழும்படி முன்போல செய்யவும்.

திர்யக்பாதனம்—அதாவது ரஸம் குறுக்காகச் செல்லுமாறு செய்து எடுப்பது திர்யக் பாதனமாகும். ஓர் மண்பாண்டத்தில் சுத்த ஜலம்விட்டு மற்றொரு பாண்டத்தில் ரஸத்தை வைத்துத் தண்ணீருள்ள பாண்டம் சாய்ந்து ரஸம் இருக்கும் பாண்டத்தின் கழுத்து பாகத்தில் பொருந்தும்படி செய்து வாய்மூடி ரஸம் உள்ள பாண்டத்தை அடுப்பேற்றி எரிக்க அந்த ரஸம் தண்ணீர் இருக்கும் பாண்டத்தில் விழும். இதற்கு திர்யக்பாதனமெனப்பெயர். இவ்விதம் மூன்று வித பாதனங்கள் செய்வதால் ரஸத்திலுள்ள நாகவங்கதோஷங்கள் நிவர்த்தியாகின்றன.

6. ரோதம் அல்லது போதனம்—இவ்விதம் பாதனஸம்ஸ்காரம் செய்த பிறகு அந்த ரஸத்திற்கு ரோதம் அல்லது போதனம் என்ற ஸம்ஸ்காரம் செய்ய வேண்டும். இந்த இரண்டு பதங்களுக்கும் பொருள் ஒன்றே. பாதனம் வரையிலுள்ள ஐந்து ஸம்ஸ்காரங்களால் ரஸம் ஷண்டத்தன்மையை யடைகின்றது. அத்தன்மை விலகி வீர்யம் பெறும்படி செய்யும் ஸம்ஸ்காரம் போதனமாகும். பூர்ஜ விருக்ஷத்தின் இலையில் சுடி ரஸத்தை வைத்துச் சுற்றி முடிந்து இந்துப்பு கலந்த நீரில் டோலா யந்திரமாகக் கட்டி ஸ்வேதனம் செய்யவும். மற்றொரு முறை—எலுமிச்சம்பழ ரஸத்தில் இந்துப்பை அரைத்து பில்லையாகத் தட்டி ஓர் சட்டியில் ரஸத்தை விட்டு அதன் பேரில் அந்த பில்லையை மூடி ஓர் உத்தாமணி நீர் விட்டு வாய் மூடி சீலைமண் செய்து அதைப் பூமியில் புதைத்து மூடிமேல் லகுபுடமிடவும். மற்றொரு முறை நீரி

புரண்டான், புளி, பழுபாகல், கரிப்பான், கோரைக்கிழங்கு இவைகளைக் கஷாயம் செய்து ரஸத்தை டோலா யந்திரமாகக் கட்டி எரிக்க போதனமாகும்.

7. நியமனம்—முன் சொன்னபடி போதனம் என்ற ஸம்ஸ்காரம் செய்த பிறகு அந்த ரஸத்திற்கு நியமனம் என்ற ஸம்ஸ்காரம் செய்யவேண்டும். ரஸத்தை ஓடாமல் கட்டியாகச்செய்யும் ஸமஸ்காரத்திற்கு நியமனமெனப் பெயர். கிரிபுரண்டான், புளியம்தழை, பழுபாகல், கரிப்பான், கோரைக்கிழங்கு, இவைகளின் ரஸம் எடுத்து அதில் டோலா யந்திரமாக ரஸத்தை எரிக்க நியமனமாகும். மற்றொரு விதம்—வடதேசத்தில் விளைந்த பெரிய கனத்த இந்துப்பு பாறையைக் கொண்டு வந்து அதை நடுவில் சுமார் ஒரு சாண் அல்லது ஆறு அங்குல ஆழம் குடைந்து அந்தப் பள்ளத்தில் முன் ரஸத்தை விட்டு அதில் நவாச்சாரம் அல்லது சோடாவுப்பையும் எலுமிச்சம்பழ ரஸத்தையும் விட்டு இந்துப்பு துண்டத்தால் வாயை நன்றாக மூடி பூமியில் பள்ளம் தோண்டி அந்தப் பள்ளத்தில் ஷை இந்துப்புப் பாறையை வைத்து எட்டு அங்குல உயரம் பொடி மணல் பரப்பி அதன்மேல் ஏழு நாள் உமி கொட்டி நெருப்பிட நியமனமாகும்.

8. தீபனம்—இவ்விதம் நியமனம் செய்த பிறகு அந்த ரஸத்திற்குத் தீபனம் என்ற ஸம்ஸ்காரம் செய்யவேண்டும். தீபனமென்பதே ஸந்தீபனமாகும். அன்னபேதி, பஞ்சலவணம், கடுகு, மிளகு, முருங்கைவிதை, சிகப்பு முருங்கைவிதை, வெங்காரம், இவைகளைச் சமயிடையாக எடுத்து காடியில் கலக்கி மூன்று நாள் தோலா யந்திரத்தில் ஷை ரஸத்தை எரிக்க தீபனமாகும். மற்றொரு முறை—கொடிவேலி கஷாயம் செய்து அதையும் காடியையும் சமமாகக் கலந்து அதில் முன் போல டோலா யந்திரமாக மூன்று நாள் எரிக்க தீபனமாகும்.

9. அனுவாஸனம்—தீபனம் செய்த ஷை ரஸத்திற்கு அனுவாஸன ஸம்ஸ்காரம் செய்ய வேண்டும். ஷை ரஸத்தை ஓர் பீங்கான் கோப்பையில் வைத்து ரஸம் முழுகும்படி எலுமிச்சம்பழ ரஸம் விட்டு வெய்யிலில் வைக்க அனுவாஸனமாம். இந்த ஸம்ஸ்



காரம் ரஸசிந்தாமணி முதலிய நூல்களில் காணப்படுகின்றது. ரஸரத்னஸமுச்சயம் முதலியவைகளில் காணப்படவில்லை. உண்மையில் தீபனம் முடிய சொல்லப்பட்ட எட்டு ஸம்ஸ்காரங்கள் தான் ஸம்ஸ்காரங்களாகும். இவ்விதம் ரஸத்திற்கு தீபநாந்தமான எட்டு ஸம்ஸ்காரங்களால் எடையில் எட்டில் ஒரு பாகம் தான் மீதமாக நிற்கும். அதாவது எட்டு தோலா ரஸமெடுத்து முற்கூறியபடி எட்டு ஸம்ஸ்காரங்கள் செய்தால் ஒரு தோலா தான் மீதமாகத் தேறும். ரஸத்திற்கு ஏழு தோஷங்கள் அல்லது கஞ்சுகங்கள் இருப்பதால் இந்த எட்டு ஸம்ஸ்காரங்களால் ஏழு கஞ்சுகங்களும் கழிந்து விடுவதால் சுத்தரஸம் எட்டில் ஒரு பாகம்தான் மீதமாக நிற்கும். தீபநாந்தமான எட்டு ஸம்ஸ்காரங்கள் வைத்தியனுடைய தேவைக்குப் போதுமானவைகளாகின்றன. மற்ற பத்து ஸம்ஸ்காரங்கள் கல்பமுறைகளுக்கும் ரஸவாதத்திற்கும் பயன் படுபவை. இந்த எட்டு ஸம்ஸ்காரங்கள் கல்பமுறைகளுக்கும் ரஸவாதத்திற்கும் பொதுவானவையாகின்றன. இந்த எட்டு ஸம்ஸ்காரங்களையும் செய்ய முடியாத பக்ஷத்தில் இலகுவான சுத்தி முறைகளும் சொல்லப்பட்டிருக்கின்றன.

இலகுசுத்தி—அடியிற்காணுமாறு ரஸத்தை இலகுவான முறையில் சுத்திசெய்து கொள்ளலாம். உள்ளிப்பூண்டு, கடுகு, (கறுப்புக் கடுகு) இவைகளைச் சமயிடையாக எடுத்து நீர் விடாமல் அரைத்து குகை செய்து அதில் தேவையான ரஸத்தைவிட்டு ஓர் துணியில் கட்டி முடிந்து காடியில் மூன்று நாள் தோலா யந்திரமாக எரித்து எடுத்துப் பிறகு குமரிச்சாற்றாலும், கொடிவேலி கஷாயத்தாலும் மணத்தக்காளி ரஸத்தாலும் திரிபலை கஷாயத்தாலும் முறையே தனித்தனி ஒரு நாள் கல்வத்திலிட்டு அரைத்து ரஸத்தைப் பிறகு தனிப்படுத்தி கல்வத்திலிட்டு ரஸத்தின் பாதியிடை இந்துப்பு சேர்த்து எலுமிச்சம்பழ ரஸம் விட்டு ஒரு நாள் அரைத்துப் பிறகு கடுகு, பூண்டு, நவாச்சாரம், இவைகளைத் தனித்தனி ரஸயிடை எடுத்துக் கல்வத்திலிட்டு ரஸத்தையும் சேர்த்து அரிசி கழுநீர் விட்டு அரைத்து பில்லை தட்டி உலர்த்தி மேல் பாகத்தில் பெருங்காயம் பூசி ஓர் சட்டியில்

பில்லையைப் போட்டு மேல் சட்டிமூடி வாய்க்குச் சீலைமண் செய்து காயவைத்துப் பிறகு அடுப்பேற்றி தீவ்ராக்னியாக எரித்து மேல் சட்டியின் உச்சியில் நடுவில் ஈரத்துணி போட்டு 9 மணி சாவகாசம் எரிக்க ரஸம் மேல் சட்டியில் பதங்கிக்கும். ஆறின பிறகு எடுத்துக் கொள்ளவும். ரஸத்தை நிறுத்துப் பார்த்து எடை குறைந்தால் மறுபடியும் மேல் சட்டி மூடி முன் போல எரிக்க மறுபடியும் ரஸம் மேல் சட்டியில் பதங்கிக்கும். ரஸம் சுத்தமாகும். மற்றொரு விதம் சுத்தி—ஆட்டுரோமச் சாம்பல், ஓட்டடை, மஞ்சள்பொடி, செங்கல்பொடி, இவைகளுடன் ரஸத்தைச் சேர்த்து அரைத்துப் பிறகு திரிகடு, குமரிச்சார், கொடிவேலி, திரிபலை, எலுமிச்சம்பழ ரஸம், இவைகளில் குமரிச்சார், எலுமிச்சம் பழ ரஸம், இவை நீங்கலாக மற்றவைகளைக் கஷாயம் செய்து வடி. கட்டி அதோடு குமரிச்சாரையும் எலுமிச்சம்பழ ரஸத்தையும் சேர்த்து அதில் ஷை ரஸத்தை தோலா யந்திரமாக எரித்துப் பிறகு ரஸத்தின் எடைக்கு நாலில் ஒரு பங்கு தாமிரப்பொடி சேர்த்து அரைத்து பில்லை தட்டி உலர்த்தி ஓர் சட்டியில் போட்டு மேல் சட்டி மூடி முன் போல எரித்து மேல் சட்டியில் பதங்கித்த ரஸத்தை எடுத்துக் கொள்ளவும். ரஸம் சுத்தமாகும். மற்றொரு விதம் இலகு சுத்தி—கழற்சியிலை, பழுபாகல், கரிப்பான். இவைகளை நீர் விடாமல் கெட்டியாக அரைத்து அதைக் குழித்து தேவையான ரஸத்தை விட்டு உருட்டி உப்பு நீரில் தோலா யந்திரமாக ஒரு நாள் எரித்து ரஸத்தை எடுத்துப் பிறகு கொடுவேலி கஷாயத்திலும் காடியிலும் இந்துப்பு, மிளகு, முருங்கை இவைகளைச் சேர்த்து தோலா யந்திரமாக ஸ்வேதனம் செய்ய சுத்தமாகும். மற்றொரு விதம் இலகு சுத்தி—ரஸத்தின் எடைக்கு 16-ல் ஒரு பங்கு மஞ்சள்பொடி, செங்கல்பொடி இவைகளைச் சேர்த்து எலுமிச்சம்பழ ரஸத்தால் தப்த கல்வத்தில் அரைக்கவும். பிறகு ரஸத்தைக் காடியில் கழுவி எடுத்துக் கொண்டு பேய்க்கொம்மட்டி வேர், அழிஞ்சிவேர், இவைகளைப் பொடிசெய்து அதோடு ஷை ரஸத்தை அரைத்துப் பிறகு சரக்கொன்றை சூர்ணத்தாலும், பிறகு



பிறகு கொடுவேலி சூர்ணத்தாலும் பிறகு கருஊமத்தைச் சாற்றாலும்பிறகு திரிபலைப் பொடியாலும், பிறகு திரிகடுப்பொடியாலும், சிறுகெரிஞ்சி சூர்ணத்தாலும், முறையே தனித்தனி அரைத்துப் பிறகு காடியில் கழுவி எடுத்துக் கொள்ள ரஸம் சுத்தமாகும். முன் சொன்ன பொடிகள் தனித்தனி ரஸத்தின் எடைக்கு 16ல் ஒரு பங்குஇருக்கவேண்டும். குறிப்பு மேற்சொன்ன விதமாக ரஸத்தை அரைத்துப் பிறகு அதைத் தனிப்படுத்த முடியாவிட்டால் அப்படியே ஓர் மண் சட்டியில் போட்டு மேல் மண் சட்டி மூடி வாய்க்கு சீலைமண் செய்து அதை அடுப்பேற்றி 12 மணி எரிக்க மேல் சட்டியில் ரஸம் பதங்கிக்கும். அதை எடுத்துக் கொள்ளவும். ரஸம் சுத்தமாகும். மற்றொருமுறை—மஞ்சள் பொடியுடன் ரஸத்தைச் சேர்த்துசோற்றுக்கற்றாழை நீர் விட்டு ஒரு நாள் அரைத்து ரஸத்தைமுன்போல பதங்கித்து எடுத்துக்கொள்ளவும். ரஸம் சுத்தமாகும். குறிப்பு—இம்முறை தான் மிகவும் இலகுவானதால் இதையே பெரும்பான்மையாக வைத்தியர்கள் அனுஷ்டிக்கின்றனர். மற்றொரு முறை—பூண்டையும் ரஸத்தையும் சேர்த்து தப்த கல்வத்தில் இந்துப்புடன் ஒரு மாதம் அரைத்து ரஸத்தை முன் கூறியபடி தனிப்படுத்திக் கொள்ளவும். ரஸம் சுத்தமாகும். மற்றொரு முறை—குறிப்பு—இதுவே உயர்ந்த முறை. அதாவது உலாந்து லிங்கத்திலிருந்து ரஸத்தை எடுத்துக் கொள்ளுவதே. வேப்பிலையை இடித்து ரஸம் எடுத்து அந்த ரஸத்தால் உலாந்து லிங்கத்தைக் கல்வத்திலிட்டு ஒரு யாமம் (மூன்று மணி) அரைத்து உலர்த்தவும். அல்லது எலுமிச்சம்பழ ரஸத்தால் முன்போல அரைத்து உலர்த்தவும். பிறகு அதை ஓர் சட்டியில் போட்டு வாய்க்கு ஓர் சட்டியைக் கவிழ்த்து மூடி சந்து வாய்க்குச் சீலை மண் செய்து காயவைத்து அடுப்பேற்றி 12 மணி எரிக்கவும். ஆற விட்டு எடுத்து மேல் சட்டியில் பதங்கித்திருக்கும் ரஸத்தை எடுத்துக்கொள்ளவும். குறிப்பு—உயர்ந்த உலாந்து லிங்கமாக இருந்தால் லிங்கத்தின் எடைக்குப் பாதி எடை ரஸம் கிடைக்கும். ரஸம் எடை குறைந்திருந்தால் மறுபடியும் முன் போல செய்து எரித்து மேல் சட்டியில் பதங்கிக்கும்

ரஸத்தை எடுத்துக் கொள்ளவும். இவ்விதம் எடுக்கப்படும் ரஸம் சுத்தமானது. இதில் ஏழு கஞ்சுகங்கள் சம்பந்தப்படுவதில்லையாதலால் முன்சொன்ன எட்டு ஸம்ஸ்காரங்கள் இதற்குத்தேவையில்லை. மற்றொரு முறை—முன் சொன்னபடி லிங்கத்திலிருந்து ரஸத்தை எடுத்து அதை தோலா யந்திரமாக இந்துப்பு நீரில் ஸ்வேதனம் செய்து மருந்துகளில் சேர்க்கவும். ரஸம் சுத்தமாகும்.

குறிப்பு—இங்கு லிங்கத்திலிருந்து எடுக்கப்பட்ட ரஸம் சுத்தமான போதிலும் அதாவது ஏழு கஞ்சுகங்களின்றி சுத்தமாக விருந்த போதிலும் இந்துப்பு நீரில் ஸ்வேதனம் செய்யவேண்டுமென்று சொல்லியிருப்பதால் ரஸம் சுத்தமாயிருப்பது மாத்திரம் போதாதென்றும் அதற்கு வீர்யம் உண்டாகும்படி ஸம்ஸ்காரமும் அவசியமெனப்புலப்படுகின்றது. ஆனால் நூல்களில் "ஹிங்குளாக்ருஷ்ட ஸூதஸ்து ஜீர்ணகந்த ஸமோ குணை:" என்று கூறப்படுகின்றது. இதன்பொருள்" லிங்கத்திலிருந்து முன்சொன்ன விதமாகரஸத்தை எடுத்தால் அது நிர்தோஷமாக விருப்பதுடன் கந்தகஜாரணம் செய்த மாதிரி குணமுள்ளதாகவும் இருக்கின்றது. அதாவது முன் சொன்னபடி அஷ்ட ஸம்ஸ்காரங்கள் செய்த பிறகு அந்த ரஸத்திற்கு ஜாரணம் என்ற ஸம்ஸ்காரம் செய்யவேண்டும். ஜாரணங்கள் பலவிதமாக விருந்தபோதிலும் வைத்தியர்களுக்கு முக்கியமானது கந்தகஜாரணமே. கந்தகஜாரணம் செய்யாவிட்டால் எட்டு ஸம்ஸ்காரங்கள் செய்திருந்தபோதிலும் ரஸத்தின் உண்மையான குணம் காணப்படாது. ரஸத்திற்குப் பிரத்யேகமாகச் சொல்லப்பட்ட பெருமையனைத்தும் கந்தகஜாரணத்தைப் பற்றியே நிற்கின்றது. "ஸமே கந்தேது ரோகக்ந: த்விகுணே ராஜயக்ஷ்மநுத் ] ஜீர்ணே து த்ரிகுணே கந்தே காமினீ தர்ப நாசந: ] சதுர்குணே து தேஜஸ்வீ ஸர்வ சாஸ்திர விசாரத: ] பவேத் பஞ்சகுணேஸித்த: ஷட்குணே ம்ருத்யுஜித் பவேத் ||" இதன் பொருள்—"ரஸத்திற்குச் சமயிடை கந்தகத்தை ஜாரணம் செய்தால்ரோகங்கள் நிவர்த்தியாகின்றன. ரஸத்திற்கு இரு மடங்கு கந்தகத்தை ஜாரணம் செய்தால் ராஜயக்ஷ்மா என்ற Tuberculosis விலகும். ரஸத்திற்குமூன்று மடங்கு கந்தகத்தை ஜாரணம் செய்தால் தாதுபுஷ்டி யுண்டுபண்ணும். ரஸத்திற்கு நான்கு



மடங்கு கந்தகத்தைஜாரணம் செய்தால் சித்திகளை யுண்டுபண்ணும். ஆறு மடங்குந்தகத்தை ஜாரணம் செய்தால்மரணத்தை விலக்கும்." மற்றொரு வசனம் கூறுவதாவது—"ரஸ குணா பலி ஜாரணம்விநாயம் நகலு ருஜாம் ஹரணக்ஷமோ ரஸேந்திர: ] நசகல தௌத பாகஹீந: ஸ்ப்ருசதி ரஸாயநதாமிதி ப்ரதிக்யா" இதன் பொருள்—"ரஸத்திற்கு ஆறு மடங்கு அதிகமான கந்தகத்தை ஜாரணம் செய்யாவிட்டால் அந்த ரஸம் வியாதிகளைப் போக்குவயுள்ளதாகாது. ரஸம் காயகல்பமாக ஆக வேண்டுமானால் அப்தில் சக்திபிரகம், தங்கம், இவைகளை ஜாரணம் செய்யவேண்டும். அப்பிரகம்தங்கம் இவைகளை ஜாரணம் செய்யாமல் ரஸம் ரஸாயனமாகாது"

ஆகவே கந்தக ஜாரணம் செய்யாமல் ரஸத்திற்கு சக்தி வருவது துர்லபம். லிங்கத்திலிருந்து எடுக்கப்படும் சுத்த ரஸத்திற்கும் கந்தகஜாரணம் செய்யவேண்டியது அவசியம். அதிலும் ஆறு மடங்கு அதிகமான கந்தகஜாரணமே முக்கியமானது. இதை வடமொழியில் ஷட்குண கந்தகஜாரிதம் என்பர். சாதாரணமாக ரஸத்தையும் கந்தகத்தையும் சேர்த்து அரைத்து குப்பி எரிப்பாகச் செய்யப்படும் ரஸசிந்தூரம் எதிர்பார்க்கும் பலனை யளிப்பதில்லையென்பது வைத்தியர்களின் அனுபவம். இவ்விதம் செய்யப்படும் சிந்தூரத்தை விட ரஸத்தையும் கந்தகத்தையும் நன்றாக மர்த்தித்து கஜ்ஜலி செய்து உபயோகிப்பது அதிக பலனை யளிப்பதாக விருக்கின்றது. ரஸம் யோகவாஹி என்றும் ஸகல நோய்களும் ரஸத்தால் நிவர்த்தியாகுமென்றும் நூல்கள் கூறுகின்றன. தற்காலம் அனுபவத்தில் நூல்களில் சொல்லப்படும் பெருமை ரஸத்தில் காணப்படவில்லை. அதற்குக் காரணமென்னவெனில் அநேகமாக ரஸத்தைக் கையாளும் வைத்தியர்கள் லிங்கத்திலிருந்து ரஸத்தை எடுப்பதை மாத்திரம் அறிந்திருக்கிறார்களேயன்றி அதன் ஸம்ஸ்காரத்தை யறிந்தவர்களே துர்லபம். வஸந்தகுஸுமாகரம் போன்ற மருந்துகளில் ரஸம் சேருமிடங்களில் எல்லாம் குப்பி எரிப்புச் சிந்தூரத்தையே சேர்க்கின்றனர், ஆகவே ரஸத்தின் குணம் அவைகளில் தகுந்தபடி காணப்படுவதில்லை. கந்தகஜாரணம் செய்த ரஸம் தான் உண்மையில் வியாதிகளை

நிவர்த்திக்கின்றது. ரஸஹிருதயத்தில் கோவிந்த பகவ பாதர்களும் "மூர்சித்வா ஹரதி ருஜம்" என்றுசொல்லியுள்ளார்கள். ரஸத்திற்கு மூர்ச்சநா என்ற ஸம்ஸ்காரம் செய்தால் தான் வியாதிகளைக் கண்டிக்குமென்பது அதன் பொருள். மூர்ச்சநா என்பதும் ஜாரணம் என்பதும் அநேகமாக ஒன்றே. ஆகவே தனிரஸம் குணம் கொடுக்கக்கூடிய தல்லவென்பதும் மூர்ச்சநா ஜாரணம் செய்தால் தான் குணம் கொடுக்குமென்பதும் தெளிவாகின்றது. ஜாரணம் என்ற சொல்லுக்கு மடிதல் என்பது பொருள். கந்தகஜாரணம் என்றால் ரஸத்தில் கந்தகம் மடிதல் என்பதாகின்றது. கந்தகம் போலவே தங்கம், அப்பிரகம் முதலியவைகளாலும் ஜாரணம் செய்யும்படி நூல்கள் கூறுகின்றன. வைத்தியர்களுக்கு முக்கியமாக வேண்டியது கந்தகஜாரணமே. கந்தகஜாரணம் செய்யத் தெரிந்த வைத்தியர்களே தற்காலம் மிகவும் துர்லபர். அப்பிரக ஜாரணம் தெரிந்தவர்கள் தற்காலம் இல்லையென்றே சொல்லலாம். மருந்துகளில் ரஸம் சேர்க்கும்படி சொல்லுமிடங்களிலெல்லாம் கந்தகஜாரணம் செய்த ரஸத்தையே சேர்க்கவேண்டும். லிங்கத்திலிருந்து எடுக்கப்படும் ரஸம் பிறவியிலேயே சுத்தமானதால் அதற்கு வேறு சுத்தி வேண்டியதில்லை. ஆனால் அதற்கும் கந்தக ஜாரணம் வேண்டியது அவசியம். "கந்தக ஜாரணு ரஹித; ஸம்சுத்தோபி ரஸ: யோகேஷு நயோஜ்ய: । தத ஹர்த்ருத்வ சக்த்யனுதயாத் ॥" என்று வசனம் கூறுகின்றது. இதன் பொருள்—"கந்தகஜாரணம் செய்யாமல் எட்டு ஸம்ஸ்காரங்கள் செய்து சுத்தமாக விருந்தபோதிலும் ரஸத்தை மருந்து முறைகளில் சேர்க்கக் கூடாது. ஏனெனில் கந்தகஜாரணம் செய்யாமல்ரஸத்திற்குவியாதிகளை நிவர்த்திக்கும் சக்தி உண்டாவதில்லை." ரஸாதெள பாக அவலேஹ குடிகா சூர்ணேதெள வா ரஸ யோகே விஹிதே ... வசனம் ஸம்சுத்தோ மூர்ச்சிதோ கந்தகஜீர்ணோ ஹேமாதிஜீர்ணோ வா மிருத: அம்ருதோ வா ரஸோ யோஜ்ய: இதி குருஸங்கேத:" என்று வசனம் கூறுகின்றது.

# ருதுசூல நிவாரணி

ஸ்திரீகளுக்கு மாதவிடாய் காலங்களில் காணும் தொந்திரவுகளுக்கு இது ஓர் ஒப்புயர் வற்ற மருந்து. பெரும்பாலும் மாதவிடாய் காலங்களில் பல ஸ்திரீகளுக்கு சகிக்கமுடியாத வலி, அதிக ரக்தப்பெருக்கு, தலைவலி, வயிற்றுவலி, வாந்தி, காய்ச்சல், ஆகிய இவை சேர்ந்தோ அல்லது தனித்தோ காணுகின்றன. அதுமாத்திரமின்றி சிலருக்கு அகாலங்களில் ரக்தப்பெருக்கு கண்டு பல நாள் அல்லது மாதக்கணக்கில் நீடிப்பதும் உண்டு. சிலருக்கு இந்தத் தொந்திரவுகளுடன் வெட்டை நோயும் கலந்து காணும். ஆகாரத்வேஷம், கைகால் ஓய்வு, முதலியனவும் இருக்கும். இவைகளனைத்தையும் **சூதக வாயு** எனப் பொதுவாக சுதேச வைத்தியர்கள் கூறுவர். டாக்டர்கள் இந்நிலைமையில் பல வித சிகித்சை செய்வதுண்டு. கடைசியாகக் கத்திகளின் சகாயத்தையும் அபேக்ஷிக்கக் கூடும். கர்ப்பாசயம் நிலை புரண்டு அக்கம் பக்கங்கள் அல்லது முன் பின் பக்கங்கள் ஆகிய இவைகளில் இருப்பது முதலியவை இந்நோய்க்குக் காரணங்களெனக் கூறப்படுகின்றது. அசோகாரிஷ்டம், சுகுமாரகிருதம் ஆகிய இவை போன்றவை சுதேச வைத்தியர்களால் பெரும்பான்மையாகக் கையாளப்படுகின்றன. கடுமையான கேசுகளில் இவை எதிர்பார்க்கும் பலனை யளிப்பதில்லை.

**ருதுசூல நிவாரணி** இந்நோய்களில் கைகண்ட மருந்து. கருப்பையை (கர்ப்பாசயத்தை) ஒழுங்கு செய்து பழைய நிலைமையில் வைப்பதுடன் வலி, ரக்தப்பெருக்கு, முதலியவைகளைப் பூர்ணமாக நிறுத்துகின்றது. மற்ற மருந்துகளால் அசாத்தியமெனக் கைவிடப்பட்ட பல சூதக நோய்களை குணப்படுத்துகின்றது.

உபயோகிக்கும் விதம்—தினம் காலையில் 1 மாத்திரை, சாயங்காலம் 1 மாத்திரை வீதம் மாத்திரையை வாயில் போட்டுக்கொண்டு வெந்நீர் விட்டு விழுங்கவேண்டும். பத்தியம்—அதிகமாக வாயு பதார்த்தம் சேர்க்கமலிருப்பது நலம்.

ஒரு பாக் மருந்து விலை ரூ. 10. தபால் செலவு வேறு.

விலாசம்—பண்டிட் நாராயணய்யங்கார்,

2, போலீஸ் ஸ்டேஷன் மேற்கு சந்து, மதுரை.

Registered No. M. 4018.

# க்ஷயாந்தக ரஸம்.

க்ஷய நோய்களுக்கு (Pulmonary Tuberculosis) ஓர் ஒப்பற்ற மருந்தெனச் சுதேச நூல்களில் கூறப்பட்ட தாளக பஸ்மம், வைக்ராந்த பஸ்மம், ஸ்வர்ணமாக்ஷிக சிந்தூரம், ஆகிய இம்மூன்றும் அளவுப்படி சேர்க்கப்பட்டு க்ஷயாந்தக ரஸமென்ற பெயருடன் வெகு காலமாக அநுபவத்தில் பரிசீலிக்கப்பட்ட இம்மருந்து க்ஷய நோய்களில் மிகுந்த குணம் கொடுக்கக் கூடியது. சுமார் 15 நாட்களுள் காய்ச்சல் முதலியவைகளைக் குறைத்துச் சில மாதங்களுக்குள் பூர்ண சுகத்தை அளிக்கின்றது. 4 அல்லது 5 மாதங்களுக்குள் க்ஷய நோய் பூர்ணமாக நிவர்த்தியாகும். இத்துடன் சுவர்ண பஸ்மம் சேர்த்துச் சாப்பிடுவதும் நாகபலா லேகியத்தை அநுபானமாகக் கொள்வதும் மிகவும் நல்லது.

| | | |
|---|---|---|
| க்ஷயாந்தக ரஸம் | ஒரு மாத மருந்து விலை ரூ. | 10. |
| ஷை ஸ்வர்ண சிந்தூரத்துடன் | ஷை ஷை விலை ரூ. | 20. |
| நாகபலா லேகியம் | ஷை ஷை விலை ரூ. | 5. |

தபால் செலவு வேறு.

மருந்தைக் காலை 6-மணி, சாயங்காலம் 6-மணி ஆக இரண்டு வேளைகளில் தேனில் குழைத்துச் சாப்பிட வேண்டும். அரிசி, கோதுமை, பருப்பு, தயிர், பால், நெய், வெண்ணெய், பாதாம்பருப்பு, சாரப் பருப்பு, ஆரஞ்சு, கொடிமுந்திரிப் பழம், ஜீர்ணமாகக் கூடிய காய்கறிகள் முதலியன புஷ்டியாகச்சேர்த்துக் கொள்ளவும். சற்று காய்ச்சல் இருந்தாலும் ஸ்நானம் கூடாது. காய்ச்சல் நின்ற பிறகு தலை ஸ்நானம் செய்யலாம்.

விலாசம்:—

பண்டிட் நாராயண அய்யங்கார்,

2, நீர் போலீஸ் ஸ்டேஷன் மேல்புரம் சந்து, மதுரை.



| (1) | (2) | (1) | (2) |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |